DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 681/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : பாண்டி | Calling | : |
| Father / Husband Name | : கணேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 23rd September 2025.

---

**(1,2 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் காத்தையா பிள்ளை தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு வாள்மேல் நடந்த அம்மன் கோவில் இடத்தில் சொந்தமாக 3 கடைகள் உள்ளன. அந்த கடைகளை வாடகைக்கு விட்டுள்ளேன். அதில் ஒரு கடையில் புளியடிதம்மத்தைச் சேர்ந்த மைக்கேல் என்பவர் பிளாஸ்டிக் பேன்சி கடை வைத்து நடத்தி வருகிறார். பேன்சி கடைப் பொருள்களை பார்வைக்காக வெளியில் வைத்திருப்பார். அவர் கடைக்குப் பக்கத்தில் வழக்கு 1வது எதிரியான பழனிச்சாமி என்பவர் கோழிக்கறிக்கடை வைத்து நடத்தி வருகிறார்.

2) அந்தகடையில் கோழிக் கறி வெட்டும்போது பக்கத்துக் கடையான பேன்சி ஸ்டோரில் வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருள்களின் மீது கோழி ரத்தம் தெரித்துள்ளது. அதனால் மைக்கேல் பழனிச்சாமியிடம் பலமுறை சொல்லியும் கேட்காததால் என்னிடம் வந்து சொன்னார். அதனால் கடந்த 05.08.2022 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் மேற்படி கடைக்குச் சென்று 1 வது எதிரி

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.09.23 13:22:13 +0530

பழனிச்சாமியிடம் கேட்டேன். அதற்கு 1 வது எதிரி பழனிச்சாமி கோத்தா, கொம்மா என்றும் அசிங்கமான வார்த்தைகளை சொல்லியும் திட்டினார். வழக்கு 2 வது எதிரியான சரண்யா என்பவரும் என்னை அசிங்கமான வார்த்தையை சொல்லி அந்த பயலே, இந்த பயலே என தகாத வார்த்தையில் திட்டினார்.

3) மேற்படி கடைகளுக்கு இடையில் ரத்தம் தெரிக்காமல் இருப்பதற்காக வைக்கப்பட்டிருந்த தகரத்தை எடுத்து 1வது எதிரி பழனிச்சாமி என் வலது முன்னங் கையில் தாக்கினார் ( சாட்சி தனது முன்னங்கையில் உள்ள தழும்பைக் காட்டுகிறார்). பின்பு வழக்கு 2 வது எதிரியான சரண்யா என்னை அறுவறுக்கத் தக்க வார்த்தைகளால் திட்டி 1 வது எதிரியிடமிருந்த தகரத்தை வாங்கி என் வலது காதுக்கு மேல் தலையில் தாக்கிவிட்டார். என்னை மீண்டும் தாக்க வந்தபோது நான் தடுத்ததில் என் கைகள், கைவிரல்களில் காயம் ஏற்பட்டது. இதனைப் பார்த்த என் சகோதரி மஞ்சுளா, மைக்கேல் ஆகியோர் விலக்கிவிட்டனர்.

4) எதிரிகள் இருவரும் எனக்கு கொலைமிரட்டல் விட்டனர். அதன் பின்பு, மேற்படி சம்பவத்தில் எதிரிகளால் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எனக்கு கையிலும் தலையிலும் தையல்கள் போடப்பட்டது. அங்கிருந்தபோது காளையார்கோவில் காவல் நிலைய போலீசார் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். நான் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் காயமுற்று இருந்ததால் எனக்கு உதவியாக இருந்த என் மகள் ஆர்த்தி நான் சொல்ல சொல்ல மேற்படி புகார் மனுவை எழுதி என்னிடம் படித்து காண்பிக்க நான் சொன்னது சரியாக இருந்ததால் புகார் மனுவை கையொப்பம் செய்து போலீசாரிடம் கொடுத்தேன். **இந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) அதன் பின்பு, அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

6) அதன் பிறகும் தொடர்ந்து எதிரிகள் எனக்கு தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். கடந்த 2024 ம் ஆண்டு 1 வது எதிரி பழனிச்சாமி, 2 வது எதிரி சரண்யாவும்

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.09.23 13:22:24 +0530

மற்றும் ஒரு ஜெகன் என்பவரும் என்னையும் என் பேரனையும் தாக்கி நானும் என் பேரனும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அந்த சம்பவம் தொடர்பாகவும் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக எதிரிகள் எனது குடும்பத்திற்கு தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வருவதால் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.23 13:22:38 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 681/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : மஞ்சுளா | Calling | : |
| Father / Husband Name | : கணேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 23rd September 2025.

-----------------------------------------------------------------------------------------------------------

**(1,2 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் காத்தையா பிள்ளை தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகவில்லை. அ.சா.1 எனது உடன் பிறந்த சகோதரர். அ.சா.1க்கு வாள்மேல் நடந்த அம்மன் கோவில் இடத்தில் சொந்தமாக 3 கடைகள் உள்ளன. அந்த கடைகளை வாடகைக்கு விட்டுள்ளார். அதில் ஒரு கடையில் புளியடிதம்மத்தைச் சேர்ந்த மைக்கேல் என்பவர் பிளாஸ்டிக் பேன்சி கடை வைத்து நடத்தி வருகிறார். மற்றொரு கடையில் நான் துணிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். பேன்சி கடைப் பொருள்களை பார்வைக்காக வெளியில் வைத்திருப்பார். அவர் கடைக்குப் பக்கத்தில் வழக்கு 1வது எதிரியான பழனிச்சாமி என்பவர் கோழிக்கறிக்கடை வைத்து நடத்தி வருகிறார்.

2) அந்தகடையில் கோழிக் கறி வெட்டும்போது பக்கத்துக் கடையான பேன்சி ஸ்டோரில் வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருள்களின் மீது கோழி ரத்தம் தெரித்தால் மைக்கேல் பழனிச்சாமியிடம் பலமுறை சொல்லியும் கேட்காததால் கடையின் உரிமையாளரான அ.சா.1யிடம் வந்து சொன்னார். அதனால் கடந்த 05.08.2022 ம் தேதி மாலை 05.00 மணியளவில் அ.சா.1 மேற்படி கடைக்குச் சென்று

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.09.23 13:23:04 +0530

1 வது எதிரி பழனிச்சாமியிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டார். அதற்கு 1 வது எதிரி பழனிச்சாமி கோத்தா, கொம்மா என்றும் வாய்க்கு வந்தார்போல் அசிங்கமான வார்த்தைகளை சொல்லியும் திட்டினார். வழக்கு 2 வது எதிரியான சரண்யா என்பவரும் அ.சா.1யை அசிங்கமான வார்த்தையை சொல்லி தகாத வார்த்தையில் திட்டினார்.

3) மேற்படி கடைகளுக்கு இடையில் ரத்தம் தெரிக்காமல் இருப்பதற்காக வைக்கப்பட்டிருந்த தகரத்தை எடுத்து 1 வது எதிரி பழனிச்சாமி அ.சா.1ன் வலது முன்னங் கையில் தாக்கினார். பின்பு வழக்கு 2 வது எதிரியான சரண்யா அ.சா.1யை அறுவறுக்கத் தக்க வார்த்தைகளால் திட்டி 1 வது எதிரியிடமிருந்த தகரத்தை வாங்கி அ.சா.1ன் வலது காதுக்கு மேல் தலையில் தாக்கிவிட்டார். அ.சா.1யை மீண்டும் தாக்க வந்தபோது அ.சா.1 தடுத்ததில் அவரது கைகள், கைவிரல்களில் காயம் ஏற்பட்டது. இதனைப் பார்த்த நானும், மைக்கேல், அங்கிருந்தவர்களும் விலக்கிவிட்டோம். நாங்கள் தடுப்பதற்குள் எதிரிகள் இருவரும் அ.சா.1 யை தகரத்தால் வெட்டி காயத்தை ஏற்படுத்திவிட்டார்கள்.

4) எதிரிகள் இருவரும் அ.சா.1க்கு கொலைமிரட்டல் விட்டனர். அதன் பின்பு, மேற்படி சம்பவத்தில் எதிரிகளால் அ.சா.1க்கு ஏற்பட்ட காயங்களுக்காக காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அ.சா.1க்கு கையிலும் தலையிலும் தையல்கள் போடப்பட்டது. அங்கிருந்தபோது காளையார்கோவில் காவல் நிலைய போலீசார் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். அ.சா.1 எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தார்.

5) அதன் பின்பு, அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.23 13:23:26 +0530